A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 23 / 2024**

திருமதி N. சகாயமேரி,
க/பெ. நாகராஜன்,
எண்.17, முத்துமாரியம்மன் தெரு,
துளசிங்கபுரம், பரங்கிமலை,
சென்னை – 600 016.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு நாகராஜன்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர் /பரங்கிமலை,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV பரங்கிமலை துணை மின்நிலைய வளாகம்,
எண். 30 RVDRA ரோடு, பரங்கிமலை, சென்னை – 600 016.

2. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி K.கிரிஜா பாய், உதவி மின்பொறியாளர் /பரங்கிமலை
திரு P. நரேஷ் பாபு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி)

**மனு பெறப்பட்ட நாள்: 18–04–2024**

**கேட்புரை நாள்: 28–05–2024**

**ஆணை நாள்: 30–05–2024**

18.04.2024 அன்று பெறப்பட்ட திருமதி N. சகாயமேரி, க/பெ. நாகராஜன், எண்.17, முத்துமாரியம்மன் தெரு, துளசிங்கபுரம், பரங்கிமலை, சென்னை – 600 016 அவர்களின்

மனு மேல்முறையீட்டு மனு எண் 23/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.05.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது மின் இணைப்பு எண்.242-056-648-இல் விதித்துள்ள அதிகமான தொகையை குறைத்து சரியான கணக்கீடு செய்து செலுத்த வேண்டிய தொகையை தெரிவிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது மின் இணைப்பு எண்.242-056-648-இல் விதித்துள்ள அதிகமான தொகையை குறைத்து சரியான கணக்கீடு செய்து செலுத்த வேண்டிய தொகையை தெரிவிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 MRT சோதனை அறிக்கையின்படி மின் அளவி நல்ல முறையில் இருப்பதால் மின்கணக்கீடு பதிவுகளின்படி நிலுவை தொகை போடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது மின் இணைப்பு எண்ணில் விதித்துள்ள தொகையை குறைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 17.12.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1, 26.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 26.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரரது குறையான 10/2023 மின் கணக்கீட்டில் அதிக மின் கட்டண தொகை வந்துள்ளதாக அளித்த மனுவிற்கு, மனுதாரரது மின் கணக்கீட்டில் உள்ள மின் அளவி பதிவிறக்கம் செய்யப்பட்டு மின் அளவி மற்றும் மின் நுகர்வு முறை நல்ல நிலையில் உள்ளதாக MRT அறிக்கை பெறப்பட்டு உள்ளது.*

*எனவே மனுதாரரது மின் இணைப்பில் தவறான கணக்கீடு செய்யப்படவில்லை மற்றும் அதிக மின் கட்டணம் வசூலிக்கப்படவில்லை.*

*எனவே நிலுவையில் உள்ள மின் கட்டணத்தொகையை செலுத்துமாறு மனுதாரருக்கு இம்மன்றம் அறிவுறுத்துகிறது.*

*MRT மின் அளவி பதிவிறக்க அறிக்கையில் மனுதாரரது மின் இணைப்பில் மின் துண்டிப்பு பிறகும் மின் நுகர்வு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ள எதிர்மனுதாரர் (செயற்பொறியாளர்/இ&ப/கிண்டி) அவர்களுக்கு இம்மன்றம் தெரிவித்துக் கொள்கிறது.*

*இத்துடன் இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.05.2024 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு நாகராஜன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி K.கிரிஜா பாய், உதவி மின்பொறியாளர் / பரங்கிமலை மற்றும் திரு P. நரேஷ் பாபு, செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி, சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1 ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய

நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி N. சகாயமேரி, க/பெ. நாகராஜன், எண்.17, முத்துமாரியம்மன் தெரு, துளசிங்கபுரம், பரங்கிமலை, சென்னை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், மின் இணைப்பு எண் 242–056–648 மூலம் மின்சாரம் பயன்படுத்தி வருவதாகவும், தனக்கு இரண்டு மாதத்திற்கு 400 முதல் 500 யூனிட்டுகள் வரை மின்சாரம் பயன்படுத்தி வருவதாகவும், கடந்த வருடம் செப்டம்பர் மாதம் வரை மின் அளவீட்டின் படி முறையாக மின் கட்டணம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 இந்நிலையில் 10/2023 கனக்கீட்டின் படி தனக்கு ரூ.14,008/– மின்கட்டணம் செலுத்த வேண்டும் என தனது அலைபேசியில் குறுஞ்செய்தி வந்ததாகவும், 15.07.2023 முதல் 18.09.2023 வரை தான் பயன்படுத்திய மின் அளவீடு 590 யூனிட் எனவும், அதற்கு ரூ.2,670/– மின் கட்டனம் செலுத்தியுள்ளதாகவும், அதன்பிறகு 18.09.2023 முதல் 15.11.2023 வரை தன் மீட்டர் ரீடிங் படி 1678 யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக உள்ளது எனவும், அதற்கு தனக்கு ரூ 14,008/– மின்கட்டனம் செலுத்த வேண்டும் என குறுஞ்செய்தி வந்ததாகவும், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழை மற்றும் குளிர் காலங்கள், அந்த மாதங்களில் மின் பயன்பாடு அதிகமாக இருக்காது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இரண்டு மாதங்களுக்கு 400 முதல் 500 யூனிட்டுகள் பயன்படுத்தும் தனக்கு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மழைக்காலங்களில் அதிக யூனிட் மின்சாரம் பயன்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் மின்மீட்டர் மற்றும் அதன் அளவீட்டின் மேல் சந்தேகம் ஏற்பட்டு 17.12.2023 அன்று தலைவர் அவர்களிடம் மனுசெய்ததாகவும், மனுவில் தனது பழைய மின்மீட்டர் மாற்றவும் மேலும் அதிகமாக

காண்பிக்கப்படும் மின் அளவை பார்வையிட்டு சரியான மின் அளவும் அதற்குறிய கட்டணத்தையும் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 08.02.2024 மின்சார வாரியத்தில் இருந்து திரு.செந்தில் என்ற CA தன் வீட்டு மின் மீட்டரை சரிபார்ப்பதற்காக எடுத்து சென்றதாகவும், அப்போது மின் மீட்டர் ரீடிங்கை தனக்கு காட்ட மறுத்துவிட்டதாகவும், அந்த சமயத்தில் எவ்வளவு யூனிட் உள்ளது என்பதையும் கூறு மறுத்துவிட்டதாகவும், அதன் பிறகு 31.01.2024 அன்று கேட்புரைக்காக தலைவர் அவர்களை சந்தித்து அவர்களிடம் மின்மீட்டர் குறைபாடுகளையும் தவறுகளையும் அளவீட்டு முறையும் ஆதாரங்களுடன் சமர்ப்பித்ததாகவும், இந்நிலையில் 26.02.2024 அன்று உத்தரவு போட்டதாக தனக்கு 06.03.2024 அன்று மேல்முறையீடு செய்யப்படும் உத்தரவு கிடைக்க பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்படி ஆணையில் மின்மீட்டர் சரியாக உள்ளதாகவும் நிலுவை மின் கட்டணம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், தனது மனுவினை முறையாகவும் சரியாகவும் விசாரிக்கப்படவில்லை எனவும், மின்சார ஊழியர் திரு செந்தில் அவர்கள் தனது வீட்டின் மின் மீட்டரை 08.02.2024 அன்று தான் பரிசோதனைக்காக எடுத்து சென்றார் ஆனால் உதவி பொறியாளர் 30.01.2004 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மின்மீட்டர் சரியாக வேலை செய்வதாக தனக்கு கடிதம் அனுப்பியதாக கூறப்பட்டுள்ளதாகவும் 30.01.2024 தேதியிட்ட உதவிப் பொறியாளர் கடிதம் ஏதும் தனக்கு கிடைக்கப் பெறவில்லை 30.01.2024 அன்று தனக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக பொய்யாக கூறப்படுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் மின் அளவீடு அதிகமாக உள்ளதாக உரிய காலக்கட்டத்தில் பதிவிறக்கம் செய்து தகவலுக்கும் நுகர்வோர் அட்டவணையில் உள்ள அளவீடு முறையாக இல்லை எனவும், மேலும் தனது பழைய மின் மீட்டரை மாற்றிவிட்டு புதிய மீட்டர் வைக்க கோரிய தனது கோரிக்கை மேலும் எந்த உத்தரவும் போடவில்லை எனவும், மேலும் தனது மின் இணைப்பை துண்டிக்க மின்வாரிய ஊழியர்கள் யாரும் வரவில்லை எனவும், ஆனால் தான் மின்சாரத்தை தொடர்ந்து பயன்படுத்தி வந்ததாகவும், ஆனால் தலைவர் அவர்களின்

உத்தரவால் மின் இணைப்பு DC செய்யப்பட்டுள்ளதாக தவறாக குறிப்பிடபட்டுள்ளதாகவும், செப்டம்பர் 2023 முதல் மின் இனைப்பிற்கு சரியாக அளவீடு செய்யப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 இதற்கு அந்த பகுதி மின் ஊழியர் திரு செந்தில் அவர்கள் காரணம் ஆவார், அதேபோல் தன் பகுதியில் பலவீடுகளில் மின் அளவீடு எடுக்காமல் அவருக்கு தோன்றிய அளவீடை எடுத்து கொள்வதாகவும், இதனால் தன் பகுதியில் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 26.02.2024 தேதியிட்ட உத்தரவு கிடைக்கப்பெற்ற பிறகு மின்சார அலுவலகத்தை அணுகி தற்போது வரை உள்ள நிலுவைத் தொகை எவ்வளவு என்றுகேட்ட போது அதையும் தர மறுத்துவிட்டார்கள் எனவும், மேலும் தன் மின் அட்டையில் தற்போது வரை மின்அளவீடு அதற்குறிய கட்டணம் பூர்த்தி செய்துதர கேட்டும் மறுத்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 தற்போது வரை தான் எவ்வளவு யூனிட் பயன்படுத்தியுள்ளதற்கான கட்டணம் இதுவரையில் தெரிவிக்கப்படாமல் உள்ளதாகவும், இதனால் தான் மிகுந்த மன உளைச்சலுக்கும் துன்பத்திற்கும் ஆளாகி உள்ளதாகவும், ஆகவே தனது மேல்முறையீட்டு மனுவினை பெற்றுக் கொண்டு 26.02.2024 தேதியிட்ட தலைவர் அவர்களின் உத்தரவை ரத்து செய்து தனது மின் பயன்பாட்டின் அளவை முறையாக கனக்கு செய்து தான் கட்ட வேண்டிய தொகையை கூறும்படியும் மேலும் தனது பழைய மின் மீட்டரை மாற்றி புதிய மின்மீட்டர் அமைத்து தர உத்தவிடவும் இந்த மேல்முறையீட்டு மனு மீது உத்தரவு போடும் வரை தனது வீட்டின் மின் இணைப்பை துண்டிக்காமல் இருக்க உரிய உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் வேண்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திருமதி நா.சகாயமேரி, கதவு எண் 17முத்துமாரியம்மன் தெரு, துளசிங்கபுரம் பரங்கிமலை, சென்னை–600016 என்ற பெயரில் மின் இணைப்பு எண் 242–056–648–ல் 5KW வீட்டு உபயோகத்திற்கு கடந்த 27.04.2005 அன்று முதல் பயன்பாட்டில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்த மின் இணைப்பிற்கான 09/2023 மாதத்திற்கான மின்கட்டணம் 1678 யூனிட்க்கு ரூ 14,008/-ஐ நுகர்வோர் உரிய நேரத்தில் செலுத்தாததால் 10.01.2024 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், ஜனவரி-2023-ம் மாதத்தின் 420 யூனிட்டிற்கு மின்கட்டணம் ரூ.1245/- மனுதாரர் உரிய நேரத்தில் செலுத்தாததால் 09.02.2003 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், மனுதாரர் நிலுவை தொகை செலுத்தியவுடன் 10.02.2023 அன்று மறு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மீண்டும் ஏப்ரல்-2023-ம் மாதத்திற்கான மின் கட்டணம் ரூ.1080/-ஐ செலுத்தாததால் 19.04.2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், மனுதாரர் நிலுவை தொகை 20.04.2023 அன்று செலுத்தியவுடன் மறு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் ஜூலை/2023 மாதத்திற்கான 690 யூனிட்டிற்கு ரூ.3560/-ஐ மனுதாரர் உரிய நேரத்தில் செலுத்தாததால் 18.08.2023 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், நுகர்வோர் ஜீலை-2023-ன் நிலுவை தொகையை அபராதத்துடன் செலுத்தியதால் 04.09.2023 அன்று மறு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரர் அவர்களால் பிப்ரவரி 2023-ம் மாதத்திலிருந்து தொடர்ந்து மின் வாரியத்திற்கு மின் கட்டணத்தை முறையாக உரிய நேரத்தில் செலுத்தவில்லை தொடர்ந்து காலதாமதமாகவே மின்கட்டணம் செலுத்தி வந்ததாகவும், மேலும் 15.07.2023 முதல் 18.09.2023 வரை 590 யூனிட் பயன்படுத்தியதாகவும் அதன் தொகை ரூ.2670/- செலுத்திவிட்டதாகவும், 18.09.2023 முதல் 15.11.2023 வரை 1678 யூனிடிற்கு ரூ.14,008/- மின் கட்டணம் வருவதால் இதற்கு ஆட்சேபனை தெரிவித்து 18.12.2023 அன்று மனு பெறப்பட்டதாகவும், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று 08.02.2024 அன்று மின் அளவியை Download செய்யப்பட்டு MRT சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு அவர்களிடம் சோதனை அறிக்கை பெறப்பட்டதாகவும், மின் அளவி சரியான முறையில் இயங்குவதாகவும், "The consumption pattern and meter are found in order" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே மின் அளவி நல்ல முறையில் இயங்குவதால் மின் அளவி மாற்றம் செய்யப்படவில்லை எனவும், மேலும் MRT சோதனை அறிக்கையின்படி

ஜூன் 2023லிருந்து அக்டோபர் 2023-ம் மாதம் வரையில் கணக்கீடு செய்து ரூ.14,008/- ஐ 1678 யூனிட்ஸ் விவர அட்டவணை எதிர்மனுதாரர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| As per MRT report | | | As per consumer ledger | | | Different units |
|---|---|---|---|---|---|---|
| Month | Reading | Unit | Month | Reading | Unit | |
| 06/2023 | 21897.30 | 1109 | 06/2023 | 22110 | 690 | 419 units (under reading) |
| 08/2023 | 22955.20 | 1058 | 08/2023 | 22700 | 590 | 468 units (under reading) இந்த இரண்டு மாதத்தில் மின்கணக்கீடு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது |
| 10/2023 | 23810.10 | 855 | 10/2023 | 24378 | 1678 | 419+468=887 |

6.5 ஜூன்-2023 மற்றும் ஆகஸ்ட்-2023 மாதத்தில் குறைவாக எடுக்கப்பட்ட ரீடிங்கை அக்டோபர் 2023-ம் மாதத்தின் ரீடிங்கில் கணக்கு நேர் செய்யப்பட்டதாகவும், மேலும் MRT-ல் இருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி மீட்டர் ரீடிங் சரியாக உள்ளது என குறிப்பிட்டுள்ளதால் மீட்டர் மாற்றம் செய்யப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 பழைய மின் அளவியை மாற்றவும் மேலும் அதிக மின் கணக்கீடு காண்பிக்கப்படும் மின் அளவியை பார்வையிட்டு சரியான மின் அளவும் அதற்குரிய கட்டணத்தையும் திரும்ப பெற 17.12.2023 அன்று தலைவர் (CGRF) அவர்களிடம் மனு செய்ததை தொடர்ந்து திரு செந்தில் அவர்கள் MRT சோதனைக்கு அனுப்புவதற்காக மனுதாரரின் வீட்டிலேயே மின் அளவி download செய்யப்பட்டதாகவும், மின் அளவி மனுதாரரின் வீட்டில் கழற்றப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 உதவி பொறியாளர்/இ&ப/புனித தோமையர் பிரிவு அவர்களால் 30.01.2024 அன்று மின் அளவி சரியாக வேலை செய்வதாக எந்த ஒரு கடிதமும் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனவும், மேலும் போதிய மின் கணக்கீட்டாளர் உதவி பொறியாளர்/இ&ப/புனிததோமையர் பிரிவு அலுவலகத்தில் இல்லாத காரணத்தினால் செக்டார் 056/கணபதி காலனி பகுதியில் களப்பணி உதவியாளர் மூலமாக மின் கணக்கீடு

எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த பகுதியல் திரு செந்தில் அவர்களால் மின்கணக்கீட்டு பணி மேற்கொள்ளப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் நவம்பர்–2023–ம் மாதத்திற்குண்டான மின் கட்டணம் ரூ.14008/–ஐ மனுதாரர் செலுத்தாத காரணத்தினால் 10.01.2024 அன்று மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், "Disconnection –DC type purpose–non payment" DC type fuse" என்று consumer ledgerல் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மின் துண்டிப்பை தொடர்ந்து மனுதாரர் அவர்கள் மின்சாரத்தை பயன்படுத்தி வந்ததால் 15.03.2024 அன்று துணை நிதி கட்டுப்பாடு/தெற்கு–1 சென்னை அவர்களால் இந்த மின் இணைப்பை ஆய்வு செய்து செக் ரீடிங் consumer ledger ல் பதிவிட்டு Extra levy தொகை ரூ.7392/–ம் compounding தொகை ரூ.1000/–ம் பதிவேற்றம் செய்யப்பட்டதாகவும், தவிர இன்றைய தேதி 22.05.2024 வரையில் இந்த மின் இணைப்பில் மொத்த நிலுவை தொகை ரூ.19742/– ஆகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 CGRF மன்றம் வழங்கிய ஆணையில் திருப்தி அடையாத மனுதாரர் மன்றம் வழங்கிய ஆணையை எதிர்த்து தமிழ்நாடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மையம் மேல்முறையீடு சென்றதை தொர்ந்து மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணையின்படி ஆணையிட்ட தொகையில் 25% தொகை ரூ.5843–ஐ 17.04.2024 அன்று செலுத்தியதால் தற்போது இந்த மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்யப்படாமல் live–ல் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 MRT சோதனை அறிக்கையின்படி மின் அளவி நல்ல முறையில் இருப்பதால் மின்கணக்கீடு பதிவுகள் நிலுவை தொகை வசூல் செய்யப்பட்டதாகவும் அனைத்தும் மின் வாரிய விதிகளின் அடிப்படையில்தான் மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே தயவு கூர்ந்து இந்த மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்ய உத்தரவு வழங்குமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 10/2023 கணக்கீட்டின் படி தனக்கு ரூ.14,008/- மின்கட்டனம் செலுத்த வேண்டும் என தனது அலைபேசியில் குறுஞ்செய்தி வந்ததாகவும், 15.07.2023 முதல் 18.09.2023 வரை தான் பயன்படுத்திய மின் அளவீடு 590 யூனிட் எனவும், அதற்கு ரூ.2,670/- மின் கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், அதன்பிறகு 18.09.2023 முதல் 15.11.2023 வரை தன் மீட்டர் ரீடிங் படி 1678 யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக உள்ளது எனவும், அதற்கு தனக்கு ரூ 14,008/- மின்கட்டனம் செலுத்த வேண்டும் என குறுஞ்செய்தி வந்ததாகவும், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழை மற்றும் குளிர் காலங்கள், அந்த மாதங்களில் மின் பயன்பாடு அதிகமாக இருக்காது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பில் உள்ள மின்னளவி சரியாக செயல்படுவதாக தெரியவில்லை எனவும், தன்னால் செலுத்த வேண்டிய மின்கட்டணத்திற்குரிய splitup விவரங்கள் தரவும் வலியுறுத்தி மேல்முறையீடு செய்துள்ளார்.

7.3 ஜனவரி-2023-ம் மாதத்தின் 420 யூனிடிற்கு மின்கட்டணம் ரூ.1245/- மனுதாரர் உரிய நேரத்தில் செலுத்தாததால் 09.02.2003 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், மனுதாரர் நிலுவை தொகை செலுத்தியவுடன் 10.02.2023 அன்று மறு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மீண்டும் ஏப்ரல்-2023-ம் மாதத்திற்கான மின் கட்டணம் ரூ.1080/-ஐ செலுத்தாததால் 19.04.2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், மனுதாரர் நிலுவை தொகை 20.04.2023 அன்று செலுத்தியவுடன் மறு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் ஜூலை 2023 மாதத்திற்கான 690 யூனிடிற்கு ரூ.3560/-ஐ மனுதாரர் உரிய நேரத்தில் செலுத்தாததால் 18.08.2023 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், நுகர்வோர் ஜூலை-2023-ன் நிலுவை தொகையை அபராதத்துடன் செலுத்தியதால் 04.09.2023 அன்று மறு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், இந்த மின் இணைப்பில் 18.09.2023 முதல் 15.11.2023 வரை உபயோகப்படுத்தப்பட்ட 1678 யூனிட்டிற்கு ரூ.14,008/- மின்கட்டணம் நுகர்வோர் உரிய நேரத்தில் செலுத்தாததால் 10.01.2024 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 18.09.2023 முதல் 15.11.2023 வரை பதிவாகியுள்ள 1678 யூனிட்டிற்கு ரூ.14,008/– மின் கட்டணம் வருவதால் இதற்கு ஆட்சேபனை தெரிவித்து 18.12.2023 அன்று மனு பெறப்பட்டதாகவும், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று 08.02.2024 அன்று மின் அளவி Download செய்யப்பட்டு MRT சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு அவர்களிடம் சோதனை அறிக்கை பெறப்பட்டதாகவும், மின் அளவி சரியான முறையில் இயங்குவதாகவும், "The consumption pattern and meter are found in order" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே மின் அளவி நல்ல முறையில் இயங்குவதால் மின் அளவி மாற்றம் செய்யப்படவில்லை என தெரிவித்து ஜூன் 2023லிருந்து அக்டோபர் 2023–ம் மாதம் வரையில் MRT சோதனை அறிக்கையின்படி கணக்கீடு செய்த அட்டவணையை எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

7.6 ஜூன்–2023 மற்றும் ஆகஸ்ட்–2023 மாதத்தில் குறைவாக எடுக்கப்பட்ட ரீடிங்கை அக்டோபர் 2023–ம் மாதத்தின் ரீடிங் கணக்கில் நேர் செய்யப்பட்டதாகவும், மேலும் MRT–ல் இருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி மீட்டர் ரீடிங் சரியாக உள்ளது என குறிப்பிட்டுள்ளதால் மீட்டர் மாற்றம் செய்யப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும் நவம்பர்–2023–ம் மாதத்திற்குண்டான மின் கட்டணம் ரூ.14008/–ஐ மனுதாரர் செலுத்தாத காரணத்தினால் 10.01.2024 அன்று மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், "Disconnection –DC type purpose–non payment" என்று consumer ledgerல் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மின் துண்டிப்பை தொடர்ந்து மனுதாரர் அவர்கள் மின்சாரத்தை பயன்படுத்தி வந்ததால் 15.03.2024 அன்று துணை நிதி கட்டுப்பாடு/தெற்கு–1 சென்னை அவர்களால் இந்த மின் இணைப்பை ஆய்வு செய்து செக் ரீடிங் consumer ledger ல் பதிவிட்டு Extra levy தொகை ரூ.7392/–ம் compounding தொகை ரூ.1000/–ம் பதிவேற்றம் செய்யப்பட்டதாகவும், தவிர இன்றைய தேதி 22.05.2024 வரையில் இந்த மின் இணைப்பில் மொத்த நிலுவை தொகை ரூ.19742/– ஆகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேற்கூறிய இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் 18.09.2023 முதல் 15.11.2023 வரை பதிவாகியுள்ள 1678 யூனிட்டிற்கு ரூ.14,008/– மின்

கட்டணம் பெறப்பட்டதால் 18.12.2023 அன்று இதற்கு ஆட்சேபனை தெரிவித்ததால் 08.02.2024 அன்று மின் அளவி Download செய்யப்பட்டு MRT சோதனையில் மின் அளவி சரியான முறையில் இயங்குவதாக (The consumption pattern and meter are found in order) குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே மின் அளவி நல்ல முறையில் இயங்குவதால் மின் அளவி மாற்றம் செய்யப்படவில்லை எனவும் அறியமுடிகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் மின்கட்டணம் செலுத்தாததால் 10.01.2024 அன்று மின் துண்டிப்பு உதவி பொறியாளரால் செய்யப்பட்டது என்பது எதிர்மனுதாரரால் கேட்புரையின் போது தெரிவிக்கப்பட்டது.

7.9 மேல்முறையீட்டாளரின் ஒரு கோரிக்கையான பழைய மின்னளவியை மாற்றி புதிய மின்னளவி பொருத்துமாறு எழுப்பும் கோரிக்கைக்கு, எதிர்மனுதாரர் MRT ஆய்வறிக்கையில் கடித எண் Lr No. AEE/MRT/M/CEDC/S/F.4/D. 103/24 dt. 16.02.2024 –இல் மின்னளவி சரியாக செயல்படுவதாக ஆவணங்கள் இணைத்ததன் அடிப்படையில் தெரியவருகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் இருந்த மின்அளவியின் நிலை குறித்து அறிய நான் Evidence Act, 1872 section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact."*

மேற்கூறிய சான்று சட்டத்தின் படி எந்தவொரு அரசாங்க பதிவும் நாட்டின் சட்டத்தின் கீழ் சாட்சியாகும் என தெரியவருகிறது. எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பிலிருந்த மின்அளவி நன்றாக செயல்படுவதால் மின்னளவி மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது.

7.10 மேலும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி 06/2023 மற்றும் 08/2023 ஆகிய கணக்கீட்டு காலங்கள் முறையே 419 மற்றும் 468 யூனிட்டுகள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதும் அதன் காரணமாகவே 10/2023 மாத கணக்கீட்டில் விடுபட்ட அலகுகளுடன் சேர்த்து 1678 யூனிட்டுகள் அதிகமாக கணக்கீடு

செய்யப்பட்டதும் அறியமுடிகிறது. எனவே, MRT–யில் இருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி மின்னளவி சரியான முறையில் இயங்கி வருவதால், அவ்வறிக்கையில் பெறப்பட்ட தரவுகளின்படி 6/2023, 8/2023 மற்றும் 10/2023 ஆகிய காலத்திற்கு மறுகணக்கீடு செய்து தமிழ்நாடு மின்வழங்கல் விதி 12–ன்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என தீர்வு செய்யப்படுகிறது.

7.11 மேலும், 10.01.2024 அன்று மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டபின் தொடர்ந்து மனுதாரர் அவர்கள் மின்சாரத்தை பயன்படுத்தி வந்ததால் 15.03.2024 அன்று துணை நிதி கட்டுப்பாடு/தெற்கு–1 சென்னை அவர்களால் ஆய்வு செய்து Extra levy தொகை ரூ.7392/–ம் compounding தொகை ரூ.1000/–ம் பதிவேற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நிகழ்வு மேல்முறையீட்டாளர் மின்குறைதீர் மன்றத்தில் முறையீடு செய்த நாள் மற்றும் மன்ற ஆணைக்கு பிற்பட்ட நிகழ்வாக இருப்பதாலும், மின் திருட்டு சம்பந்தமான குறைகள் குறைதீர்மன்ற விதிகளின்படி மின் குறைதீர்ப்பாளரின் வரம்பிற்குள் வராததாலும் இந்நிகழ்வு தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## 8.0 <u>முடிவுரை:</u>

8.1 மேற்கூறிய பத்திகளின் அடிப்படையில்

அ) MRT சோதனை அறிக்கையின்படி மின் அளவி சரியான முறையில் இயங்கிவருவதால் மின் அளவி மாற்றம் செய்யக்கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

ஆ) கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி 06/2023 மற்றும் 08/2023 ஆகிய கணக்கீட்டு காலங்கள் முறையே 419 மற்றும் 468 யூனிட்டுகள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதும் அதன் காரணமாகவே 10/2023 மாத கணக்கீட்டில் விடுபட்ட அலகுகளுடன் சேர்த்து 1678 யூனிட்டுகள் அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டதும் அறியமுடிகிறது. எனவே, MRT–யில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி 06/2023, 08/2023 மற்றும் 10/2023 ஆகிய காலத்திற்கு மறுகணக்கீடு செய்து தமிழ்நாடு மின்வழங்கல் விதி 12–ன்படி நடவடிக்கை எடுக்கமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 23/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி N. சகாயமேரி, – By RPAD
க/பெ. நாகராஜன்,
எண்.17, முத்துமாரியம்மன் தெரு,
துளசிங்கபுரம், பரங்கிமலை, சென்னை – 600 016.

2. உதவி மின்பொறியாளர் /பரங்கிமலை,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV பரங்கிமலை துணை மின்நிலைய வளாகம்,
எண். 30 RVDRA ரோடு, பரங்கிமலை, சென்னை – 600 016.

3. செயற்பொறியாளர் /இ&ப/கிண்டி,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம், கே.கே. நகர், சென்னை – 78.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.